# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

**අංක 11,579 — 1958 නොවැම්බර් 7 වැනි සිකුරාදා — 7.11.1958**

11,579 ம் இலக்கம் — 1958 ம் ஆண்டு கார்த்திகை மாதம் 7 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I: தொகுதி (II) — விளம்பரங்கள்

## கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

### நீர்ப்பாசன இலாகா

*கீழே குறிக்கப்பட்டிருக்கும், அனுராதபுரம்-புதுற்றவுண் பெரும் பகுதித் தலைமைக்காரியாலயக் கட்டிட வேலைகளுக்கு* **1958** *ம் ஆண்டு நவம்பர் மாதம்* **26** *ந் திகதி காலை* **9.30** *மணிவரை வடமத்திய பகுதி நீர்ப்பாசன அதிபர் கேள்விப்பத்திரங்களை ஏற்றுக்கொள்ளுவார்.*

(அ) *பெரும்பகுதி நீர்ப்பாசன அதிபர் காரியாலயம் ;*

(ஆ) *சிரேஷ்ட குமாஸ்தா இல்லங்கள்* 9 *ம்,* 10 *ம் இலக்கங்கள் ;*

(இ) *இரு* 30 *அடி விட்டமுள்ள கருங்கல்லாற்கட்டப்படும் கிணறுகள்.*

*நீர்ப்பாசன இலாகாவில்* (அ) **50,000** (ஆ) **20,000** (இ) **15,000** *ஆகிய தொகைகளுக்கோ அல்லது மேலோ பதிவு செய்யப்பட்டவர் இதற்கு விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்கள்.*

*மிகிந்தலை-மகாகணதராவ உபபகுதி நீர்ப்பாசன அதிபர் அவர்களிடம் இருந்து விண்ணப்பப்பத்திரங்களும், விபரங்களும் நவம்பர்* **11** *ந் திகதி தொடக்கம்* **22** *ந் திகதிவரை பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்பக்காரர்கள் கேள்விப்பத்திரங்களை இருவிண்ணப்பப் பத்திரங்களில் விண்ணப்பித்தல் வேண்டும்.*

*கேள்விப்பத்திரங்கள் பெற விரும்பும் விண்ணப்பக்காரர்கள், நீர்ப்பாசன அதிபர், மகாகணதராவ-காரியாலயத்தில் அல்லது கச்சேரிகளில்* **25** *ரூபா முற்பணம் கட்டி றிசீற்று சமர்பித்தால் கேள்விப்பத்திரங்கள் வழங்கப்படும். தற்சமயம் வேலையை ஒப்புக்கொண்டிருக்கும் விண்ணப்பக்காரர்கள் தாங்கள் வேலை ஒப்புக்கொண்டிருக்கும் உத்தியாகத்தரிடமிருந்து தங்கள் திருப்தி பற்றிய அத்தாட்சிப்பத்திரம் சமர்ப்பித்தல் வேண்டும்.*

*கேள்விப்பத்திரம் திறக்கும் போது விண்ணப்பக்காரர்கள் சமுகந்தர அனுமதிக்கப்படுவார்கள்.*

*நீர்ப்பாசன அதிபர்,*
*மகாகணதராவ, உ. ப.*

*மிகிந்தலை,*
**1958** *ம் ஆண்டு நவம்பர் மீ* **3** *ந் உ.*

**1955 ம் ஆண்டு (ஜனவரி) தை மாதம் 1 ந் திகதி தொடக்கம் அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்குமுரிய திருத்தப்பட்ட கிரய விகிதங்கள்**

# " இலங்கை அரசாங்க வர்த்தமானி (கெசற்) "

**வெள்ளிக்கிழமைதோறும் வெளியிடப்படுவது**

1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் **விளம்பரதாரர்களே பொறுப்பாளராவர்.**

2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத் துடன், **அரசாங்க அழுத்தகன், அரசாங்க அச்சகம், கொழும்பு,** அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.

3. கிழமை நாட்களில் மு. ப. 9 மணி முதல் பி. ப. 4.30 மணி வரையும், சனிக்கிழமைகளில் மு. ப. 9 மணி முதல் பி. ப. 1 மணி வரையும் காரியாலய நேரமாகும்.

4. கிழமை நாட்களில் பி. ப. 3.30 மணிக்கும், சனிக்கிழமைகளில் நண்பகல் 12 மணிக்கும் பணங் கொடுக்கல் வாங்கல் முடிவுறும்.

5. **சகல அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படல் வேண்டும்.** தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித்தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகனின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும்.

6. " நகலே " **கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் எழுதுதல் விசேஷமாக " ரைப் " அடித்தல்** பிழைகளையும், காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும்.

7. **கையொப்பங்களின் கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.**

8. வியாபார விளம்பரங்களும், பெயர் மாற்றம்பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.

9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுபடவேண்டிய விளம்பரங்கள் " சுப்பிரீம் கோட் புரெக்ர ரால் " கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப் படமாட்டா.

10. **1955 ம் ஆண்டு (ஜனவரி) தை மாதம் 1 ந் திகதி** தொடக்கம் அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் பின்வருமாறு :—

| | ரூ. | ச. |
|---|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய .. .. | 10 | 0 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலம் அல்லது அதன் பகுதி .. | 5 | 0 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் ½ பக்கம் .. | 60 | 0 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் .. | 120 | 0 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.

11. **வெள்ளிக்கிழமைதோறும் இலங்கை அரசாங்க வர்த்தமானி வெளியிடப்படும்.** அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

12. **வெளியாவதற்கு மூன்று வேலை நாட்களுக்கு முன் பி. ப. 4 மணிக்குள் (சாதாரணமாக செவ்வாய்க்கிழமை பி. ப. 4 மணி)** அரசாங்க அழுத்தகன், அரசாங்க அச்சகம், கொழும்பு, அவர்கட்கு சகல அறிவித்தல்களும், விளம்பரங்களும் வந்துசேரவேண்டும்.

13. **ஒரு வருடத்திற்கு அல்லது அரை வருடத்திற்குரிய சந்தா, முன்பணமாக கொழும்பு, அரசாங்கப் பிரசுர நிலைய அதிபரால் பதிவு செய்யப்படும்.**

14. **சந்தா விகிதங்கள்—**

| | ரூ. | ச. | |
|---|---|---|---|
| ஒரு வருட சந்தா .. .. | 15 | 0 | .. ஒவ்வொரு பகுதிக்கும் |
| | 7 | 0 | .. ஓராம் பகுதியின் ஒவ்வொரு பிரிவுக்கும் |
| ஒவ்வொரு பகுதியினதும் தனிப் பிரதி .. | 0 | 25 | |
| | 0 | 31 | .. தபாற் செலவுடன் |
| ஓராம் பகுதியின் ஒவ்வொரு பிரிவும் .. | 0 | 10 | |
| | 0 | 14 | .. தபாற் செலவுடன் |

15. கைவசமுள்ள பழைய பிரதிகளுக்கு இரட்டிப்புப் பணம் செலுத்தப்படல் வேண்டும். **கொழும்பு, அரசாங்கப் பிரசுர நிலைய அதிபர் அவர்கட்கு** விண்ணப்பிக்கவேண்டும்.

இலங்கை அரசாங்க அச்சகத்தில் பதிப்பிக்கப்பெற்றது.